## ஊரின் குப்பை.. ஊருக்கே உரம்... கலக்குது, பரமேஸ்வரபுரம்!

## 10.10.2012









வீடுகளில் சேரும் குப்பைகளை சாலையோரங்களில் வீசி எறிந்து, சுற்றுசூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி.. அதன் மூலம் பல்வேறு தொற்று நோய்களையும் வாங்கிக் கட்டி கொள்பவர்களுக்கு மத்தியில்.. வீட்டுக் கழிவுகளையே தரம் பிரித்து, திடக்கழிவு மேலாண்மை முறையின் மூலம் இயற்கை உரமாக மாற்றி விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள், திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் அருகில் உள்ள பரமேஸ்வரபுரம் கிராம மக்கள். சுஸ்லான் காற்றாலை நிறுவனம் மற்றும் வள்ளியூரில் உள்ள ஏ.ஐ.ஆர்.டி (கிராமப்புற வளர்ச்சிக்கான அமைப்பு) என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகியவை இணைந்துதான் இந்த ஆரோக்கிய பயணத்திற்கு அடித்தளமிட்டுள்ளன.

இதைப் பற்றிப் பேசிய ஏ.ஐ.ஆர்.டி அமைப்பைச் சேர்ந்த சாது, “சுஸ்லான் நிறுவனம் திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றாலைகளை அமைத்துள்ள கிராமங்களில் அங்குள்ள மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து கொண்டிருக்கிறது. இதற்காகவே சி.எஸ்.ஆர் என்று ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நகரப்பகுதிகளுக்கு இணையாக கிராமங்களிலும் கழிவுகள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. அந்தக் கழிவுகளை சாக்கடைகளிலும், குளக்கரையிலும் கொட்டுவதால் சூழல் கெட்டு, பல்வேறு நோய்கள் பரவுகிறது. அதைத்

தடுக்கத்தான் இந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கிராம மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பயிற்சி கொடுத்து, குப்பைகளை உரமாக மாற்றி விவசாயத்திற்குப் பயன்படுத்த வைக்க முடிவு செய்தோம். முதல் கட்டமாக சோதனை அடிப்படையில் பரமேஸ்வரபுரம் கிராமத்திலிருந்து எங்க திட்டத்தைத் தொடங்கினோம். அதற்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. அதனால், இப்போது பக்கத்தில் இருக்கும் ராதாபுரம், சௌந்தரபாண்டியபுரம் கிராமங்களிலும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**குப்பை இலவசம்!**

திடக்கழிவு மேலாண்மையில் கழிவுகளை மறுசுழற்சி செய்து விவசாய இடுபொருளாக பயன்படுத்துவது, சுகாதார மேம்பாடு என்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் இந்தத் திட்டத்தை வீடு, வீடாக சென்று சொன்னோம். பரமேஸ்வரபுரம் பஞ்சாயத்தில் வீடு வீடாக குப்பைகளை எடுப்பதற்கு என்றே ஒருவரை வேலைக்கு போட்டிருக்காங்க. அவர் காலையில் குப்பை வண்டியை எடுத்துக் கொண்டு செல்வார். அந்த வண்டியில் மட்கும் குப்பை, மட்காதக் குப்பைகள் என்று தனித்தனியாக இரண்டு பெட்டிகள் இருக்கும். பொது மக்களே தரம் பிரித்து, வைத்திருக்கும் குப்பையை அதற்கான பெட்டியில் போட்டிருவாங்க. இந்த ஊழியருக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் மாதம் பத்து ரூபாய் கொடுத்துடுவாங்க. ஆரம்பத்தில் குப்பை போடுவதற்கு காசா என்று சிலர் கேலி பேசினாங்க. ஆனால் திட்டத்தின் நோக்கத்தையும், அதன் மூலம் கிடைக்கும் பலன்களையும் எடுத்துச் சொன்னதும் மக்கள் ஆர்வமாயிட்டாங்க. இதற்காக பஞ்சாயத்துத் தலைவர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு அமைத்திருக்கிறோம். மாத மாதம் இந்தக் குழு, கூட்டம் நடத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்துவாங்க. பரமேஸ்வரபுரம் கிராமத்திலிருந்து மட்டும் மாதம் 5 டன் வரைக்கும் குப்பை கிடைக்கிறது. அது மக்கின பிறகு, அப்படியே விவசாயிகளுக்கு இலவசமாக கொடுத்திடுவோம். அதை அவர்கள் இயற்கை உரமாக மாற்றி பயன்படுத்திட்டிருக்காங்க.

**சுத்தம், சுகாதாரம்!**

பஞ்சாயத்து தலைவர் கல்யாணி, எங்க கிராமத்தில் இந்தத் திட்டத்தை ஒன்றரை வருடமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதனால் ஊரே பார்ப்பதற்கு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கு. இந்தத் திட்டத்தை முறைப்படி கண்காணிக்க தெருவிற்கு ஒருத்தர் என்று, 15 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் கமிட்டியிருக்கு. திடக்கழிவு மேலாண்மையால் எங்க கிராமத்தைத் தொற்றுநோயிலிருந்து காப்பாற்றிவிட்டோம் என்றார்.

இயற்கை இருக்கையில், ரசாயனம் எதற்கு?

பரமேஸ்வரபுரம் பஞ்சாயத்தில் கிடைக்கும் குப்பைகளை உரமாகப் பயன்படுத்தி வரும் விவசாயிகளில் ஒருவரான இசக்கி, நான் இந்திய ராணுவத்தில் வேலை பார்த்துட்டு, ஓய்வுக்குப் பிறகு விவசாயம் பார்க்க ஆரம்பித்தேன். 20 வருடமாக ரசாயன விவசாயம்தான் செய்து கொண்டிருந்தேன். இப்போது இரண்டு வருடமாகத்தான் கொஞ்சம், கொஞ்சமாக இயற்கை விவசாயத்திற்கு மாறிக் கொண்டிருக்கிறேன். அதற்கு காரணமே இந்தக் குப்பை உரம்தான். இதை

போடும் போதே ரசாயன உரத்திற்கு இணையாக மகசூல் கிடைக்கும் போது ஏன் ரசாயனம் பக்கம் போகணும் என்று படிப்படியாக குறைத்துவிட்டேன் என்றார்.

**தொடர்புக்கு**

**சாது,செல்போன் : 94431 – 21509**

**கல்யாணி, தொலைபேசி : 04637 – 254126**

**இசக்கி, செல்போன்: 94865 – 43743.**